**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.358/2025**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | பிரசன்னா(PW3) | Calling | உதவி ஆய்வாளர் |
| Father's Name | | | |
| Village | பெருமாநல்லூர் காவல் நிலையம் | | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st **day of August 2026** by K.Kulanthiavel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused 1 to 4 Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது பெருமாநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.3.2025 ஆம் தேதி பெருமாநல்லூர் காவல் நிலைய தலைமை காவலர் பிரபு என்பவர் நிலையை அலுவல் இருந்த போது அவிநாசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பெயரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சிவராஜ் என்பவரது புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி நிலைய குற்ற எண்.123/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS- ன் கீழ் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கினை புலன்விசாரணைக்காக ஆய்வாளர் லோகநாதன் அவர்களின் பார்வைக்கு வைத்தார். புகார் **அ.சா.ஆ.2** ஆகவும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

உதவி ஆய்வாளர் லோகநாதன் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆனந்தன், வடிவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகவும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

எதிரிகளுக்கு அழைப்பானை சார்பு செய்தும் அவர்கள் நிலையம் ஆஜராகாததால் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் .

24.3.2015 ஆம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட கவிதா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த காயச் சான்று **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே இவ்வழக்கில் காயம்பட்ட சிவராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பத்மநாபன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த காயைச் சான்று **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே இவ்வழக்கில் காயம் பட்ட கணேஷ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெயக்குமார் என்பவரை விசாரித்து காய்ச்சாற்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின் உதவி ஆய்வாளர் லோகநாதன் பணி மாறுதலில் சென்று விட்டதால் இவ்வழக்கினை நான் புலன் விசாரணை எடுத்துக்கொண்டு 28.3.02025–ம் தேதி எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |